

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.4.2025) தொழிலதிபர் வேலு அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தாயார் திருமதி கோமதி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# காவல்துறையினருக்கு விடுமுறை - பணி உயர்வு!

## சட்டப்பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, ஏப்.29-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் பேசியதற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பதில் அளித்தார்.**

**முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:-**

உறுப்பினர் ம.சிந்தனை செல்வன் அவர்கள், இங்கு உரையாற்றுகிறபோது காவலர்கள் விடுமுறையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை 4,48,983 நாட்கள் வார விடுமுறையும், SSI மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 67,233 நாட்கள் விடுமுறையும் அளிக்கப்பட்டுள்ளது. மிக முக்கியமான சட்டம்ஒழுங்குப் பராமரிப்புப் பணிகள் உள்ள காலங்களில் மட்டும், தவிர்க்க இயலாத காரணங்களினால், சில வேளைகளில் வார விடுமுறை அளிக்க முடியாமல் போய்விடுகிறது என்று அவரே குறிப்பிட்டுச் சொன்னார். அது உண்மைதான். மற்றபடி வழக்கமான காலங்களில் வார விடுமுறை நடைமுறையிலிருந்து வருகிறது.

அதேபோன்று, உறுப்பினர் ஊதிய முரண்பாடு பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார். அதைப் பொறுத்தவரையில், காவல் துறையில் காவல் ஆளிநர்களாகப் பணியமர்த்தப்பட்டு, பதவி உயர்வு மற்றும் பல்வேறு நிலைகளில் காவல் ஆளிநர்களுக்கு இடையேயான ஊதிய முரண்பாடுகள், ஊதியக் குழு அறிமுகத்தால் வரும் ஊதிய முரண்பாடுகள் தவிர்த்து, தொடர்பான கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட காவல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அதேபோன்று, காவலர்கள் பணி உயர்வு பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார். இதுதொடர்பாக, அந்தந்த காவலர்கள் பணியாற்றும் அந்தந்த மாவட்டம், மாநகரத்திலுள்ள காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆணையர்கள்தான் முடிவெடுக்க விதிகளில் இடம் உள்ளது. எனவே, மாநில அளவில் ஒரே வகையான State Seniority அடிப்படையிலே பதவி உயர்வு வழங்குவதற்கு தற்போதைய விதிகளில் இடம் இல்லாத நிலை நிலவுகிறது என்பதை உறுப்பினருக்குத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

### திருநெல்வேலி – நாங்குனேரி – தளபதி சமுத்திரம்

# சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, ஏப். 29 -*

*திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், தளபதிசமுத்திரம் பகுதி1 கிராமம், திருநெல்வேலி நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.*

*இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-*

*திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், தளபதிசமுத்திரம் பகுதி1 கிராமம், கீழூர் வீரநங்கை அம்மன் கோவில் அருகில் திருநெல்வேலி - நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (27.4.2025) மாலை சுமார் 5.00 மணியளவில்*

*நாகர்கோவிலிருந்து திருநெல்வேலிக்கு சென்று கொண்டிருந்த TN72 BP 2351 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்றின் மீது, திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு வந்து கொண்டிருந்த TN02 AX 0321 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று தடம் மாறி எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத்தில் மேற்படி வாகனங்களில் பயணம் செய்த 16 நபர்களில் திருநெல்வேலி மாவட்டம், பாளைங்கோட்டை வட்டம், டக்கரம்மாள்புரம், விவேகானந்தர் காலனியைச் சேர்ந்த திரு.தனிஸ்லாஸ் (வயது 68) த/பெ.பாலையா, திருமதி.மார்கரெட் மேரி (வயது 60) க/பெ.தனிஸ்லாஸ், திரு.ஜோபர்ட் (வயது 40) த/பெ.தனிஸ்லாஸ், திருமதி.அமுதா (வயது 35) க/பெ.ஜோபர்ட், குழந்தைகள் செல்வி.ஜோபினா (வயது 8), செல்வன்.ஜோகன் (வயது 2) மற்றும் இராதாபுரம் வட்டம், கன்னங்குளத்தைச் சேர்ந்த திரு.மேல்கேஸ் (வயது 60) த/பெ.ஜேசு ஆகிய 7 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.*

*மேலும், இவ்விபத்தில் காயமடைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.பாலகிருஷ்ணவேனி (வயது 36), திருமதி.அன்பரசி (வயது 32), செல்வி.பிரியதர்ஷினி (வயது 23), செல்வன்.சுபி.சந்தோஷ் (வயது 21), செல்வி.அட்சயாதேவி (வயது 19), செல்வன்.பிரவீன் (வயது 10) மற்றும் செல்வன்.அஸ்வின் (வயது 8) ஆகிய 7 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. அரங்கண்ணல்
### ஏப்ரல் 29 (1999)



**பள்ளிநாட்கள் தொட்டு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற தோழராக திகழ்ந்தவர். கலைஞர் அவர்களால் பொதுவாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்.**

**தந்தை பெரியாரின் 'குடி அரசு' பத்திரிகையில் பணியாற்றினார். பின்னர், 'அறப்போர்' என்ற பெயரில் வார இதழ் நடத்தினார். இதையடுத்து அண்ணாவின் 'திராவிட நாடு' பத்திரிகையில் பணியாற்றினார்.**

**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும், கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் தலைவராகவும் சிறப்புற பணியாற்றினார்.**

**கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு, தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 'நான் முதல்வன்' திட்டத்தால் மிளிரும் தமிழ்நாடு இளைஞர்கள்!




● காலம் காலமாக மறுக்கப்பட்ட கல்வியை பெற்றுக் கொடுக்க உருவானது தான் திராவிட இயக்கம். அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்கே நமக்கு 100 ஆண்டுகள் கடந்து விட்டது.

● சூத்திரன் படித்தால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்று என்று எழுதி வைத்தார்கள். திராவிட இயக்கம் தோன்றிய பிறகு "சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி" என்கிற நிலை உருவானதால், கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு கல்வி கிடைக்கப்பெற்றது.

● கல்வி ஜனநாயகமாக்கப்பட்ட பின்பும், 'நீயெல்லாம் படித்து என்ன செய்ய போகிறாய்?', , "உங்களுக்கெல்லாம் படிப்பே வராது" என்று விதவிதமாய் கல்வியை நமக்கு மறுத்தார்கள்.

திராவிட இயக்கத்திற்குப் பிறகு சூத்திர, பஞ்சம மக்கள் கல்வியைப் பெற்றதால் இதே நபர்கள், "படிப்பிற்கும் தகுதி திறமை வேண்டும்", "கல்வி தரமில்லாமல் போய்விட்டது" என்று புலம்ப ஆரம்பித்தார்கள்.

கல்வியைத் தகுதிப் படுத்தவும், எளிய மக்களை கல்வியில் இருந்து விரட்டவும் கண்டுபிடிக்கப்பட்டது தான் "நுழைவுத் தேர்வுகள்".

● அந்த நுழைவுத் தேர்வுகளுக்கு மட்டுமல்ல, ஒன்றிய அரசுப் பணிகளில் சேர்வதற்கான தேர்வுகளிலும் தமிழ்நாட்டு மாணவர்களின் நிலையை உயர்த்திட தொடங்கப்பட்டது தான் நான் முதல்வன் திட்டம்.

● தேசிய அளவில் பள்ளிக் கல்வி, உயர்கல்வி என சேர்க்கை விகிதங்களில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உள்ளது. அதாவது பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கும் விகிதமும், 12 ஆம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் சேர்வோரின் எண்ணிக்கையும் நாட்டிலேயே தமிழ்நாடு தான் முதலிடம்.

கல்லூரி முடித்துவிட்டு வேலைக்கு சேர்வோரின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் முதல்வரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான மார்ச் 1 ஆம் தேதி, தொடங்கப்பட்டது.

● கல்லூரிகளில் பெறும் கல்வியின் மூலம் மட்டுமே தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துவிடும் என்று நாம் கூற முடியாது.

● கல்வியைத் தாண்டி திறனும் இருக்க வேண்டும். தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் தொடங்கப்பட்ட திட்டம் தான் நான் முதல்வன் திட்டம்.

இந்தியாவின் வேலையின்மை 9.2%. அதே சமயம் தமிழ்நாட்டின் வேலையின்மை 4.3% தான். கல்வியில் மட்டுமல்ல வேலையின்மையிலும் தமிழ்நாடு தேசிய சராசரியை விட முன்னிலையில் உள்ளது.

● வேலையின்மைக்கு மிக முக்கிய காரணியாக கூறப்படுவது, "திறன்" தான். எனவே தான் முதலமைச்சர் திறன் பயிற்சியை தனது கனவுத் திட்டமாக நான் முதல்வன் மூலம் செயல்படுத்தியுள்ளார்.

● திறன் மேம்பாடு மட்டுமில்லாமல் வழிகாட்டும் திட்டமாகவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி படிப்பை முடித்தவுடன் கல்லூரியில் எந்த படிப்பை தேர்ந்தெடுக்கலாம், இந்தியாவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களையும் நான் முதல்வன் வெற்றிகரமாக செய்து வருகிறது.

ஆண்டுதோறும் 3.5 இலட்சம் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

கலை அறிவியல் கல்லூரிகளில் 15 இலட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

● 2022ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம் எதிர்பார்ப்பையும் தாண்டி 2022-23ம் கல்வியாண்டில் 13.14 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு திறன்களில் பயிற்சி அளித்துள்ளது.

● 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் மட்டும் கலை மற்றும் அறிவியல் பிரிவில் 83 ஆயிரத்து 195 பேரும், பொறியியல் பிரிவில் 64 ஆயிரத்து 954 பேரும் என மொத்தம் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 149 மாணவர்கள் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.

வேலையைப் பெற்ற கலை அறிவியல் துறையைச் சேர்ந்த மாணவர்களில், லாஜிஸ்டிக் துறையில் 27.5% பேரும்,

ஐடி மற்றும் அது சார்ந்த நிறுவனங்களில் 27.01% பேரும்,

வங்கி மற்றும் நிதி சார்ந்த நிறுவனங்களில் 7.23% பேரும்,

மேலாண்மை துறையில் 3.70% பேரும்,

மருத்துவத்துறையில் 3.48% பேரும்,

எலக்ட்ரானிக்ஸ் 3.45%,

ஆட்டோமோட்டிவ் 3.24%,

தொலைத்தொடர்புத்துறை 3.23%,

சில்லறை வணிகம் 1.4%,

இதர நிறுவனங்கள் 15.97% என வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

இப்படி வேலைக்குத் தேர்வானவர்களில் 10 பேருக்கு ஆண்டு ஊதியம் 25 இலட்சத்திற்கு மேல்,

3 பேருக்கு 20 - 25 இலட்சம் வரையும்,

5 பேருக்கு 15 - 20 இலட்சம் வரையும்,

15 பேருக்கு 10 - 15 இலட்சம் வரையும் ஊதியம் பெறும் பணிகளில் சேர்ந்துள்ளனர்.

18 ஆயிரம் பேருக்கு ஆண்டிற்கு 2 - 4 இலட்சம் வரையிலும் பணியைப் பெற்று பயன்பெற்றுள்ளனர்.

பொறியியல் துறையைச் சேர்ந்தவர்களில் பணியைப் பெற்றவர்களில், ஐடி மற்றும் அது சார்ந்த நிறுவனங்களில் - 52.2% பேரும்,

ஆட்டோமோட்டிவ் துறையில் - 13.57%,

எலக்ட்ரானிக்ஸ் துறையில் - 11.82%,

கட்டுமானத்துறையில் - 3.6% பேரும்,

மெக்கானிக்கல் - 1.96% பேரும் பணியைப் பெற்றனர்.

பொறியியல் துறையைச் சேர்ந்தவர்களில் 31 பேர் ஆண்டிற்கு 25 இலட்சத்திற்கு அதிகமாகவும்,

20 - 25 இலட்சம் வரை 43 பேரும்,

15 - 20 இலட்சம் வரை 104 பேரும்,

10 - 15 இலட்சம் வரை 423 பேரும்,

8 - 10 இலட்சம் வரை 720 பேரும்,

6 - 8 இலட்சம் வரை 3,680 பேரும்,

4 - 6 இலட்சம் வரை 8332 பேரும் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

குறிப்பாக இவர்கள் கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, சேலம், அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள். தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் இருந்து அதிகமான மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர்.

இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்றவர்கள் :

● ஐஐடி, ஐஐஎம் போன்ற நிறுவனங்களில் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களை பயில வைக்கும் நோக்கத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு நாட்டின் உயரிய நிறுவனங்களில் கல்வி பயில அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் 2022 ஆம் ஆண்டு 75 மாணவர்கள் தேர்வாகியிருந்த நிலையில் 2023 ஆம் ஆண்டு 225 மாணவர்கள் தேர்வாகினர்.

● ஐஐடி-யில் 2022 ஆம் ஆண்டு அரசுப் பள்ளியைச் சேர்ந்த ஒருவர் தான் தேர்வாகியிருந்தார். ஆனால் 2023 ஆம் ஆண்டு 6 பேர் தேர்வாகினர்.

● கடந்த ஆண்டு மட்டும் அரசுப் பள்ளிகளில் பயின்று ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் சேர்ந்த மாணவர்கள் பட்டியலில் IIT-7, NIT-37 IIIT - 10 மாணவர்கள் மற்றும் இதர நிறுவனங்கள் என மொத்தம் 525 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

● அரசுப் பள்ளி மாணவர்கள் ஆண்டிற்கு 10 மாணவர்கள் கூட ஒன்றிய கல்வி நிறுவனங்களில் சேர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில் திட்டம் தொடங்கப்பட்ட முதல் வருடத்தில் 225 மாணவர்கள், இரண்டாவது வருடம் 525 மாணவர்கள் என்பதிலேயே திட்டத்தின் பாய்ச்சல் எந்தளவிற்கு உள்ளது என்பது புலனாகிறது.

● அகில இந்திய அளவில் குடிமைப்பணி தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் தமிழ்நாட்டு மாணவர்களை தயார் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தில் 2023 ஆம் ஆண்டு நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பயிற்சி பிரிவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சிவில் சர்வீஸ் தேர்வுகளில் நான் முதல்வன் திட்டத்தின் சாதனைகள் :

● குடிமைப்பணி தேர்வுகளுக்கு தயாராகும் தமிழக மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் 1,000 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.7,500 வழங்கப்படுகிறது.

● இத்திட்டத்தின்கீழ், முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதன்மை தேர்வுக்குத் தயாராவதற்காக ரூ.25,000 ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

● இந்த ஆண்டு முதல் முதன்மைத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்கள் நேர்முகத் தேர்விற்கு செல்வதற்கான பயிற்சி மற்றும் உதவித்தொகையாக 50 ஆயிரம் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

● இத்திட்டம் தொடங்கப்பட்ட முதல் 2023 -24 ஆண்டிலேயே 47 தமிழ்நாட்டு மாணவர்கள் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றார்கள்.

● அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு 57 மாணவர்கள் தமிழ்நாட்டில் இருந்து தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 50 மாணவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை பெற்றவர்கள்.

● நான் முதல்வன் திட்டத்தில் முதல்நிலைத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பேரில், முதன்மைத் தேர்விற்கு 559 பேர் தேர்ச்சி பெற்றனர். அந்த 559 பேருக்கும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் 25000 ரூபாய் வழங்கப்பட்டது. இவர்களில் 50 பேர் நேர்முகத் தேர்விலும் வெற்றி பெற்றுள்ளனர்.

● 2016 ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டில் இருந்து 100 மாணவர்கள் சிவில் சர்வீஸ் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று வேலை வாய்ப்பைப் பெற்று வந்தனர். ஆனால் அந்த எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு 20-க்கும் கீழாக குறைந்தது. ஆனால், தற்போது நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 57 ஆக உயர்ந்துள்ளது.

எனது வெற்றியை 'நான் முதல்வன்' திட்டத்திற்கு சமர்ப்பிக்கிறேன் !

● நான் முதல்வன் திட்டத்தின் மூலம் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற சங்கர் பாண்டியராஜ், "எனது வெற்றியை நான் முதல்வன் திட்டத்திற்கு சமர்ப்பிக்கிறேன்" என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

● ஏனென்றால், அவர் தொடர்ச்சியாக 7 முறை எழுதி தற்போது 8 வது முறையாக தேர்ச்சி பெற்றுள்ளார். கடந்த 7 முறையும் அவர் 8 மாதம் வேலைக்கு சென்றுவிட்டது மீதமுள்ள 4 மாதம் மட்டுமே தேர்விற்கு முழுமயாக படித்துள்ளார்.

ஆனால், நான் முதல்வன் திட்டம் மூலம் கிடைக்கப்பெற்ற உதவித்தொகையின் மூலம் கடந்த ஒரு வருடமாக முழுமையாக படித்து தற்போது வெற்றி பெற்றுள்ளார். அதனால், இந்த வெற்றியை அரசிற்கும், திட்டத்திற்கும் சமர்ப்பிப்பதாக கூறினார்.

வங்கிப் பணிகளுக்கான பயிற்சியில் நான் முதல்வன் திட்டம் :

● திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 24.9.2024 அன்று நான் முதல்வன் வங்கிப் பணிகளுக்கான உறைவிட பயிற்சி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

● இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற 360 மாணவர்களில் 266 பேர், பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) கிளார்க் பணிக்கான முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

● இத்திட்டம், துவங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே பயிற்சி பெற்றவர்களில், 73% பேர், ஸ்டேட் வங்கியின் கிளார்க் பணிக்கான முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இவர்கள், ஏப்ரல் 10 மற்றும் 12ம் தேதி நடைபெற்ற முதன்மை தேர்வில் கலந்துகொள்ளவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தேர்வு முடிவுகள் வந்தவுடன் வங்கிப் பணிகளுக்கான தேர்வில் நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்ற மாணவர்களின் பட்டியலும் வெளியாகும்.

● ஆளுநர் ரவி தொடர்ச்சியாக தமிழ்நாட்டு கல்விக் கொள்கையைப் பற்றியும், தமிழ்நாட்டு மாணவர்கள் ஒன்றிய அரசுத் தேர்வுகளில் பின்தங்கியுள்ளனர் என்றும் தமிழ்நாட்டை பலமுறை தாக்கி பேசியுள்ளார்.

● ஆளுநரின் பேச்சு ஆதாரமற்றது, வெறும் அவதூறு என்று நாம் அப்போது கூறினோம்; ஆனால், தற்போது தமிழ்நாட்டு மாணவர்கள் அகில இந்திய அளவில் அதிகமாக தேர்ச்சி பெற்று ஆளுநரின் முகத்தில் கரியைப் பூசியுள்ளனர்.